# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FIRST EXAMINATION IN BBA/ COM 96/ 97 (JULY/ AUGUST –2002)

## EXTERNAL DEGREE

**BBA/COM 101 MICRO ECONOMICS** நேரம் : 03 மணி

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

01. a. "உற்பத்திச் சாத்திய வளையி" என்ற பதத்திலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(4 புள்ளிகள்)

b. இவ்வெண்ணக்கருவின் பொருளாதார முக்கியத்துவத்தை விளக்குக..

(4 புள்ளிகள்)

c. பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி ஒரு உற்பத்திச் சாத்திய வளையியை வரைபடத் தாளில் வரைக.

| வானொலிப்பெட்டி (அலகுகள்) | தொலைக்காட்சி (அலகுகள்) | சேர்க்கைப்புள்ளிகள் |
|---|---|---|
| 350 | 0 | a |
| 330 | 10 | b |
| 300 | 20 | c |
| 250 | 30 | d |
| 150 | 40 | e |
| 0 | 50 | f |

(8 புள்ளிகள்)

d. உம்மால் வரையப்பட்ட மேற்படி வளையியானது ஏன் உற்பத்திக்கு குழிவாகக் காணப்படுகின்றது?

(4 புள்ளிகள்)

02. a. சமநோக்கு வளையி ஒன்றின் இயல்புகளை சுருக்கமாக விபரிக்குக.

(8 புள்ளிகள்)

b. சமநோக்கு வளையிகளில் இருந்து எவ்வாறு ஒரு கேள்விக்கோட்டை பெற்றுக் கொள்ளலாம்? விளக்குக.

(12 புள்ளிகள்)

. a. குறைந்து செல்லும் விளைவு விதியினை விளக்கப் படங்களுடன் விளக்குக.

(8 புள்ளிகள்)

b. எல்லைத் தொழில்நுட்ப பதிலீட்டு வீத (MRTS) தத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

a. குறுங்காலத்திலும் நீண்ட காலத்திலும் சராசரி மொத்தச் செலவுக் (மரபு ரீதியானது) கோடுகளின் (ATC) வடிவத்தை நிர்ணயிக்கும் காரணிகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

b. "மிகை இயலளவு" என்பதிலிருந்து "ஒதுக்கு இயலளவை" வேறுபடுத்திக் காட்டுக.

(8 புள்ளிகள்)

a. நிறைபோட்டியானது இயங்குவதற்குத் தேவையான அடிப்படை நிபந்தனைகளை சுருக்கமாகத் தருக.

(8 புள்ளிகள்)

b. குறுங்காலத்தில் ஒரு நிறைபோட்டி நிறுவனம் எதிர்நோக்கும் மூன்று விதமான சமநிலை நிலமைகளையும் விளக்கப்படங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

a. "தனியுரிமை" எனும் பதத்தினை விளக்குக.

(4 புள்ளிகள்)

b. தனியுரிமையில் விலை பேதப்படுத்தலுக்கு அவசியமான நிபந்தனைகள் யாவை?

(4 புள்ளிகள்)

c. தனியுரிமையாளனால் செயற்படுத்தப்படும் விலைபேதப்படுத்திலின் மூன்று நிலைகளையும் (Degrees) விளக்குக.

(12 புள்ளிகள்)

a. தனியுரிமைப் போட்டியின் இயல்புகளை சுருக்கமாக விளக்குக.

(4 புள்ளிகள்)

b. தனியுரிமைப் போட்டியில் "பொருள் வேறுபடுத்தல்" என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

(4 புள்ளிகள்)

c. தனியுரிமைப் போட்டியின் குறுங்கால, சமநிலை நிலைமைகளை விளக்கப் படங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

மூன்றிற்கு மாத்திரம் சிறுகுறிப்பு தருக.

a. கூர்னோவின் (Cournot's) இருவருரிமை மாதிரி.

b. பதிலீட்டு விளைவும், வருமான விளைவும்.

c. உற்பத்தி விரிவுப்பாதை.

d. அளவுசார் பயன்பாட்டு அணுகுமுறை.

(20 புள்ளிகள்)